








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## ஆகஸ்ட் - 2019

*We Are Here..!! To Guide You..!!*











# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## ஆகஸ்ட் - 30.08.2019

Main Office @


**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்
- புத்தகம்











Shine Academy

## தமிழக நிகழ்வுகள்

- **புகழ்பெற்ற லண்டன் கிங்ஸ் மருத்துவமனையின் கிளைகளை தமிழகத்தில் தொடங்குவதற்கான ஒப்பந்தம் உள்பட 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி முன்னிலையில் லண்டனில் கையெழுத்தாகின.**
    - தமிழக அரசுக்கும், சர்வதேச திறன்கள் மேம்பாட்டுக் கழக நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
    - தமிழகத்தில் செயல்பட்டு வரும் 108 அவசரகால ஆம்புலன்ஸ் சேவை, இந்தியாவில் சிறப்பான சேவைகளில் ஒன்றாகும்.

## தேசிய நிகழ்வுகள்

- **தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு புதுதில்லியில் நேற்று நடைபெற்ற விழாவில் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி ∴பிட் இந்தியா இயக்கத்தை தொடங்கினார்.** உடற்தகுதியை அவர்களின் வாழ்க்கைமுறையாக மாற்றுமாறு பிரதமர் நாட்டு மக்களை கேட்டுக்கொண்டார்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **ஐஎஸ்எஸ்எப் உலக துப்பாக்கி சுடும் போட்டியில் முதல் தங்கப் பதக்கத்தை வென்றார் தமிழகத்தின் இளவேனில் வாலறிவன்.**
    - பிரேசில் தலைநகர் ரியோடி ஜெனிரோவில் நடைபெறும் இப்போட்டியில் மகளிர் 10மீ ஏர்ரைபிள் பிரிவு இறுதிச் சுற்று நடைபெற்றது. இதில் இந்திய நட்சத்திர வீராங்கனை இளவேனில் வாலறிவன் 251.7 புள்ளிகள் சுட்டு தங்கப்பதக்கத்தை வென்றார். சீனியர் பிரிவில் இளவேனில் வெல்லும் முதல் தங்கம் இது என்பது குறிப்பிடத்தக்கது.
    - ஏற்கனவே ஜுனியர் பிரிவில் தங்கம் வென்ற இளவேனில், ஆசிய சாம்பியனாகவும் உள்ளார்.

# விருதுகள்

- **தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு 29/08/2019 அன்று நடைபெற்ற, விழாவில் மாற்றுத் திறனாளி வீராங்கனை தீபா மாலிக்கிற்கு ராஜீவ் கேல் ரத்னா விருது உள்பட பல்வேறு வீரர்கள், பயிற்சியாளர்களுக்கு அர்ஜுனா, துரோணாச்சார்யா விருதுகளை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.**
  - நிகழாண்டு மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா, பாராலிம்பிக் தடகள வீராங்கனை தீபா மாலிக் ஆகியோர் ராஜீவ் கேல் ரத்னா விருதுக்கு தேர்வு செய்யப்பட்டிருந்தனர்.
  - கடந்த 2016 ரியோ பாராலிம்பிக் போட்டியில் ஈட்டி எறிதலில் வெள்ளி வென்றிருந்தார் தீபா. மேலும் கேல் ரத்னா விருதை பெறும் அதிக வயதான வீராங்கனை என்ற பெருமையையும் அவர் பெற்றார்.
  - கேல் ரத்னா விருது பெறுவோருக்கு ரூ.7.5 லட்சம் ரொக்கமும், அர்ஜுனா விருது பெறுவோருக்கு ரூ.5 லட்சம் ரொக்கமும் விருதுடன் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது
  - 2019ஆம் ஆண்டிற்கான துரோணாச்சார்யா விருதுகள்
    1. ஸ்ரீ. விமல்குமார் - பூப்பந்து
    2. ஸ்ரீ. சந்தீப் குப்தா – டேபிள் டென்னிஸ்

# முக்கிய தினங்கள்

- **ஹாக்கி ஜாம்பவான் மேஜர் தயான்சந்த் பிறந்த நாளான ஆகஸ்ட் 29 ஆண்டுதோறும் தேசிய விளையாட்டு தினமாக அனுசரிக்கப்படுகிறது.**
  - ஆகஸ்ட் 29, 2019 அன்று, நாடு முழுவதும் தேசிய விளையாட்டு தினம் அனுசரிக்கப்பட்டது. பொது மக்களில் விளையாட்டு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கொண்டாடப்படுகிறது.

- **அணுசக்தி சோதனைகளுக்கு எதிரான சர்வதேச தினம் (IDANT) ஆகஸ்ட் 29, 2019 அன்று அனுசரிக்கப்பட்டது.** அணு ஆயுத சோதனை வெடிப்புகள் அல்லது வேறு எந்த அணு வெடிப்புகள்



We Shine Academy

குறித்த விழிப்புணர்வை இந்த நாள் எழுப்புகிறது.

## புத்தகம்

- **அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா பற்றிய ஒரு புத்தகம் "ஒபாமா: வரலாற்றின் அழைப்பு" ("Obama: The Call of History") என்ற தலைப்பில் நியூயார்க் டைம்ஸின் தலைமை வெள்ளை மாளிகை நிருபர் பீட்டர் பேக்கர் எழுதியுள்ளார்.** இது ஒபாமா பதவியில் இருந்த ஆண்டுகள் பற்றிய ஆழமான கருத்தை அளிக்கிறது. இதை பென்குயின் இந்தியா வெளியிட்டுள்ளது.

We Shine Academy™